# ➡இங்கு⬅ பதிவிறக்கம் செய்க

## இந்தப் பாடத்திட்டம் எதற்காக?

பருவநிலை நெருக்கடி கொண்டு வரும் பாதிப்புகளை மலேசியர்கள் உணரத் தொடங்கி விட்டனர் என்பதை ஒரு கல்வியாளராக நாங்கள் உணர்ந்துள்ளோம். இருப்பினும், பருவநிலை மாற்றங்கள் தொடர்பான நம்முடைய உரையாடல்கள் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. ஆகவே, பருவநிலை தொடர்பான விவாதங்களை நம் மாணவர்களிடையே முடுக்கிவிட நாம் செய்ய வேண்டியது என்ன?

இங்கு கொடுக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்கள், உங்கள் வகுப்பு மாணவர்களுக்கு சுழற்சி பொருளாதாரம், சுழியக் கழிவு மற்றும் நிலைபேறான வாழ்க்கை முறை பற்றி வழிகாட்டும். மலேசியப் பள்ளிகளின் கற்றல் முறைகளைக் கருத்தில் கொண்டு இந்தப் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

- நம் நாட்டு சூழ்நிலைக்கு ஏற்றவாறு உள்ள உதாரணங்கள்
- செயல்திட்டங்களை மேற்கொள்வதற்கான சரியான நடவடிக்கைகள்
- பாடத்திட்ட-ஒருங்கிணைப்பு கற்றல் முறைகள்

நம் புவியின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, நாம் ஒவ்வொரு நாளும் சரியான முடிவுகளை எடுக்க ஒருவருக்கொருவரை ஊக்குவித்துக்கொள்வோம்.

---

> “ஒரு கூழாங்கல்லை நீரில் வீசும்பொழுது பரவும் சிற்றலைகளைப் போன்று, ஒரு தனிமனிதரின் நடவடிக்கை அளவிடற்கரிய விளைவுகளை விட்டுச் செல்லும்.” – டாலாய் லாமா

---

## இதில் என்ன சேர்க்கப்பட்டுள்ளது?

**இந்தப் பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:**

- மலேசிய சூழலில் கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- சுற்றுச்சூழலைப் பேணும் பொறுப்புணர்வினை உருவாக்குதல்
- சுற்றுச்சூழலுக்கு எல்லோரும் ஆக்கப்பூர்வமான மாற்றங்களைக் கொண்டுவர முடியும் என்பதை நிரூபித்துக்காட்டுதல்

**இதில் மொத்தம் 5 சிப்பங்கள் உள்ளன?**

- சிப்பம் 1: கழிவு என்றால் என்ன?
- சிப்பம் 2: கழிவு எங்கு செல்கிறது?
- சிப்பம் 3: கழிவு வகைகள்
- சிப்பம் 4: நாம் எவ்வளவு கழிவு உற்பத்தி செய்கிறோம்?

- சிப்பம் 5: நாம் என்ன செய்யலாம்?

**குறிப்பு:** மாணவர்கள் பாடங்களை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இந்தச் சிப்பங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புற்றிருக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. ஆகையால் ஒரு சிப்பத்தை கற்றுணர்ந்த பிறகே அடுத்த சிப்பத்திற்குச் செல்ல வேண்டும்.

**ஒவ்வொரு சிப்பத்திலும் உள்ளவை:**

**60 நிமிட பாடத் திட்டம்**



TEACHER'S NAME:

DAILY LESSON PLAN

| Week | | Day | | Date | |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| CLASS | | DATE | |
| | | TIME | 1 hour |
| THEME | Health and Environment | | |
| UNIT | Civics - Responsibility (Earth) | BOOK | Non-textbook |
| FOCUS SKILLS | Writing and Speaking | | |
| CROSS-CURRICULAR ELEMENTS | Values, Science and Technology, Environmental Sustainability, Global Sustainability | | |
| CONTENT STANDARD(S) | | | |
| MAIN SKILLS | Communication Skills | | |
| COMPLEMENTARY SKILLS | Investigation Skills | | |
| LEARNING STANDARD(S) | | | |
| MAIN SKILLS | Presenting information and giving opinions about data collected | | |
| COMPLEMENTARY SKILLS | Practical data collection skills | | |
| LEARNING OBJECTIVES | | | |
| *By the end of the lesson, pupils will be able to..* | 1. measure and communicate the amount of waste we produce<br>2. separate waste into general, recyclable and organic categories<br>3. discuss our responsibility towards the Earth | | |
| SUCCESS CRITERIA | | | |
| *Pupils can/will* | 1. express and organise information independently<br>2. reflect on their experience with the waste audit project<br>3. watch and respond to a video demonstration of a waste audit | | |
| GRAMMAR FOCUS | - | | |
| ACTIVITIES | | | |
| PRE-LESSON | 1. Teacher shows students a video of a waste audit: https://www.youtube.com/watch?v=WPEL3RVFL-U<br>2. Teacher highlights the importance of conducting a waste audit and communicating the results.<br>3. Teacher hands out copies of the waste audit spreadsheet (appendix), or guides students on how to draw their own table. | | |
| LESSON DEVELOPMENT | 1. Students separate their classroom waste into types and measure the weight and/or amount of each type.<br>2. Students record and identify the top 3 types of waste in the bin.<br>3. Teacher calls on individual students to share their results.<br>4. Teacher explains how much waste is produced in Malaysia (presentation) and why we are all responsible for the environment.<br>5. Teacher elicits responses about responsibility toward the Earth. | | |
| POST-LESSON | 1. Teacher recaps the importance of using data and communication skills to exercise our responsibility towards the environment.<br>2. Teacher assigns homework. Suggested assignments:<br>○ a journal entry reflecting on the waste audit project<br>○ a waste audit report<br>○ a formal letter to the school on reducing waste | | |
| ASSESSMENT | Waste audit spreadsheet | ATTENDANCE | / |
| TEACHER'S REFLECTION | | | |

**ஒலி மற்றும் ஒளி துணைக்கருவிகள்**







**நடவடிக்கைப் பயிற்சித்தாள்**



Waste Audit Spreadsheet (Simple)

| Material type | Quantity (number) List the total number of items | Weight (grams) List the total weight | Percentage (%) Amount ÷ total x 100% |
|---|---|---|---|
| Inorganic / Solid | | | |
| Organic | | | |
| Liquid | | | |
| Recyclable | | | |
| Hazardous | | | |
| TOTAL | | | 100% |

Top 3 types of waste: 1.
2.
3.

Summarise your results:

Waste Audit Spreadsheet (Detailed)

| Item | Organic | Inorganic / Solid | Liquid | Hazardous | Recyclable |
|---|---|---|---|---|---|
| pen | | 3 pens | | | |
| nasi lemak wrapper | 5 wrappers | | | | |
| exercise book | | 2 books | | | |
| fried noodles | 2 servings | | | | |
| batteries | | | | 2 cells | |
| paint | | | 1 pot | | |
| newspaper | | | | | 1 copy |
| mineral water bottle | | | | | 3 bottles |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

Top 3 types of waste: 1.
2.
3.

Summarise your results:

## பள்ளிக்கூடங்களில் சுழியக் கழிவு மலேசியா பாடங்களைப் போதிப்பது எப்படி (ஆசிரியர்களுக்காக):

1. சுழியக் கழிவு மலேசியா வலைத்தளம் வழியாக (zerowastemalaysia.org) உங்களுக்குத் தேவையான மொழியில் பாடங்களைத் தேர்ந்தெடுத்து பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள்.
2. ஒவ்வொரு சிப்பத்திற்கான 60 நிமிட பாடத்திட்டத்தைப் படித்துப் புரிந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு பாடத்திலும் உள்ள கருத்துருவங்களை அறிந்து கொள்ள இது உதவும்.
3. சுழியக் கழிவு மலேசியா பாடத்திட்டத்தினை புரிந்துகொள்ள ஒவ்வொரு சிப்பத்திற்கும் ஒரு மணி நேரத்தை ஒதுக்குங்கள். இந்தப் பாடங்களை இரு நாள் முகாமில் கூட நடத்தலாம்.
4. சிப்பம் 1-ஐ தொடங்குவதற்கு முன்பதாக உங்கள் மாணவர்களைப் பாடத்திற்கு முந்தைய மதிப்பாய்வினையும் (pre-lesson survey) சிப்பம் 5-ஐ முடித்த பிறகு பாடத்திற்குப் பிந்தைய மதிப்பாய்வினையும் (post-lesson survey) செய்யச் சொல்லுங்கள்.

5. சிப்பம் 5-ஐ முடித்த பிறகு ஆசியர்கள் [கல்வியாளர் மதிப்பாய்வு பாரத்தைப்] ([Educator Survey]) பூர்த்தி செய்ய வேண்டும்.  இது பாடத் திட்டத்தை மேம்படுத்தத் துணை புரியும்.

## சுழியக் கழிவு மலேசியா பாடத்திட்டத்தை வீட்டில் மேற்கொள்வது எப்படி? (பெற்றோர்/ பாதுகாப்பாளர்)

1. சுழியக் கழிவு மலேசியா வலைத்தளம் zerowastemalaysia.org வழியாக உங்களுக்குத் தேவைப்படும் மொழியில் பாடங்களைத் தேர்ந்தெடுத்து பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள்.
2. ஒவ்வொரு சிப்பத்திற்கான 60 நிமிட பாடத்திட்டத்தையும், அதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள துணைப்பொருள்கள் பற்றியும் படித்துப் புரிந்து கொள்ளுங்கள்.  பாடத்திட்டம், ஒவ்வொரு சிப்பத்தின் நோக்கத்தையும் ஒரு தலைப்புக்கான மேலோட்டத்தையும் உள்ளடக்கியிருக்கும்.
3. துணைக்கருவிகளை (காட்சி வில்லை (slides) மற்றும் காணொளி) உங்கள் பாடத்திற்கு ஆதாரமாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
4. ஒவ்வொரு சிப்பத்தின் 'கற்றலின் பயன்' நிறைவேறுமாறு பார்த்துக் கொள்ளுங்கள். கொடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் மூலமாக உங்கள் குழந்தைகளின் செயல்திறனை நீங்கள் மதிப்பீடு செய்யலாம்.
5. சிப்பம் 1-ஐ தொடங்குவதற்கு முன்பதாக உங்கள் மாணவர்களைப் [பாடத்திற்கு முந்தைய மதிப்பாய்வினையும்] ([pre-lesson survey]) சிப்பம் 5-ஐ முடித்த பிறகு [பாடத்திற்குப் பிந்தைய மதிப்பாய்வினையும்] ([post-lesson survey]) செய்யச் சொல்லுங்கள்.
6. சிப்பம் 5-ஐ முடித்த பிறகு ஆசியர்கள் [கல்வியாளர் மதிப்பீட்டு பாரத்தை] ([Educator Survey]) பூர்த்தி செய்ய வேண்டும்.  இது பாடத் திட்டத்தை மேம்படுத்தத் துணை புரியும்.

## சுழியக் கழிவு மலேசியா பாடத்திட்டத்தை பகிரி (WhatsApp), தந்தி (Telegram) மற்றும் கூகள் வகுப்பறை மூலம் வீட்டில் மேற்கொள்வது எப்படி?:

1. சுழியக் கழிவு மலேசியா வலைத்தளம் வழியாக zerowastemalaysia.org. பாடத்திட்டங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும்.
2. பாடம் தொடர்பான மேலோட்டப் புரிதலுக்கு ஒவ்வொரு சிப்பத்திற்கான 60 நிமிட பாடத்திட்டத்தைப் படித்துப் புரிந்துகொள்ளவும்.
3. உங்கள் மாணவர்களை பகிரி/தந்தி குழுமத்தில் சேர்த்து உங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளவும்.  எ.கா: *அனைவருக்கும் வணக்கம்! 👋 நான் ஆசிரியை பாரதி.  அடுத்த 5 வாரங்களுக்கு நான் உங்களை சுழியக் கழிவு வீரன்/வீராங்கனையாக (WIRA ZERO WASTE) உருவாக்குவதற்கான பயிற்சிகளை*

*அளிக்கவுள்ளேன்.  நாம் பாடத்தை தொடங்குவதற்கு முன்பதாக, உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களைப் பற்றிய ஒரு உற்சாகத் தகவலையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.*

4. சிப்பம் 1-ஐ தொடங்குவதற்கு முன்பதாக, உங்கள் மாணவர்களைப் பாடத்திற்கு முந்தைய மதிப்பாய்வினையும் (pre-lesson survey) சிப்பம் 5-ஐ முடித்த பிறகு, பாடத்திற்குப் பிந்தைய மதிப்பாய்வினையும் (post-lesson survey) செய்யச் சொல்லுங்கள்.
5. சிப்பம் 5-ஐ முடித்த பிறகு ஆசியர்கள் கல்வியாளர் மதிப்பீட்டு பாரத்தை (Educator Survey) பூர்த்தி செய்ய வேண்டும்.  இது பாடத் திட்டத்தை மேம்படுத்த உதவும்.

*குறிப்பு: சுழியக் கழிவு வீரன்/வீராங்கனை (Wira Zero Waste) மெய்நிகர் வகுப்பறை, ஆகஸ்டு மாதத்தில் களமிறக்கப்பட்ட பிறகு அதன் கற்பித்தல் முறைகள் மறுஆய்வு செய்யப்படும்.*